**செய்தி வெளியீடு எண் : 460** **நாள்: 24.03.2022**

**செய்தி வெளியீடு**

**நிதி (வழிவகைகள்-II )த் துறை**

தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூபாய் 6600 கோடி** மதிப்பில் **எட்டு ஆண்டுக்காலங்களுக்கு ரூபாய் 1000 கோடி, பத்து ஆண்டுக்காலங்களுக்கு ரூபாய் 2600 கோடி, இருபது ஆண்டுக்காலங்களுக்கு ரூபாய் 1000 கோடி** மற்றும் **மறுவெளியீட்டின் வாயிலாக ரூபாய் 2000 கோடி மதிப்புள்ள 6.67 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2050** ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் **மார்ச் 29, 2022** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **மார்ச் 29, 2022** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
நிதித்துறை, சென்னை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in